# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 18.06.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2983/F/2025**

திரு.இரா.கோபிநாத் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம், .. பொது அதிகார அமைப்பு
செங்கல்பட்டு-603111.

**ஆணை**

இவ்வாணையம் 13.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.P.S.வரதராஜன், நேர்முகஉதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு தகவல்கள் 16.06.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்கள் மற்றும் தனது எழுத்துமூல விளக்கத்தையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தினை பரிசீலனை செய்த இவ்வாணையம் திரு.P.S.வரதராஜன், நேர்முகஉதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

**“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல்**

**அலுவலர் திரு.P.S.வரதராஜன், நேர்முகஉதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)ன் கீழ் அபராதம் ரூ.5000/- (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 30.06.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையிடுகிறது".**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2983/F/2025</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
செங்கல்பட்டு-603111.

**<u>மனுதாரர்:-</u>**

திரு.இரா.கோபிநாத்,
எண்.7/113, முத்தாம்மன் கோவில் தெரு,
சதுரங்கப்பட்டிணம் கிராமம்,
செங்கல்பட்டு-603102

**<u>நகல்</u>**

இயக்குநர்,
தமிழ்நாடு நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஸ்ரீநிவாசா நகர்,
விருகம்பாக்கம்,
கோயம்பேடு, சென்னை-107.

பதிவாளர்,
மாநில தகவல் ஆணையம்,
சென்னை-35.

Copy to file: KR/PA